## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No. 76/2021

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் நாள் செவ்வாய்கிழமை **பி.வா.சா.1-ன்** வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) மொழிப்பெயர்ப்பாளர் திரு.எஸ்.சுரேஷ்குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அன்னப்பூரணி | **வட்டம்** | |
| **க.பெ** | அருணாச்சலம் | **சமயம்** | |
| **கிராமம்** | நெற்குப்பை | **வயது** | 48/2024 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் திருப்பூரில் தற்சமயம் வசித்து வருகிறேன். என் பெயரில் மொத்தம் 3 பட்டா உள்ளது. நான் 8 லக்க சொத்துக்களைப் பொறுத்து கிரைய அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் ஒரு லட்ச ரூபாய்க்கு எழுதிக் கொடுத்துள்ளேன். நான் கிரையம் கொடுக்க ஒப்புக் கொண்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 63 செண்ட் ஆகும். 22.07.2021ம் தேதி வாதியிடம் ரூ.25,00,000/- அட்வான்ஸ் பெற்றுக் கொண்டு தாவா சொத்தை கிரையம் செய்ய ஒப்புக் கொண்டு 25.07.2021ம் தேதி ஒரு கிரைய எக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது பார்ட்டி என்ற இடத்தில் உள்ள A.அன்னப்பூரணி என்று உள்ள கையெழுத்து என்னுடையது என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள 1வது பார்ட்டி என்ற இடத்தில் உள்ள A.அன்னப்பூரணி என்ற கையெழுத்து என்னுடையது தான். நான் வாதியிடம் 25 லட்சம் பணம் வாங்கி புஸ்பா என்பவரிடம் 22.07.2021ம் தேதி 15 லட்சம் ஈடுகடனை திருப்பியுள்ளேன் என்று சொன்னால் அதுசரியல்ல. நான் பல நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். கடன்களை அடைப்பதற்காக 25 லட்சம் பெற்றுக் கொண்டு பிரதிவாதிக்கு அ.சா.ஆ.1 கிரைய ஆவணம் எழுதிக்

வாதி தரப்பில் பிராதில் இல்லாத கேள்விகள் எழுப்பப்படுகிறது. அதுபோல் கேள்விகள் எழுப்ப அனுமதி மறுக்கப்படுகிறது. வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. வா.சா.ஆ.3 அறிவிப்பு 17.09.2021 அன்று அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு 24.09.2021 ம் தேதி தான் கிடைத்தது. எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் கிரைய எழுதிக்

கொடுக்க வாதியை நான் அணுகியதாக வேறு சாட்சிகள் என்னிடம் இல்லை. வாதியின் வசிப்பிடம் தெரியுமா என்று கேட்டால் அவரை நான் பெட்ரோல் பங்கில் தான் சந்திப்பேன். அந்த பெட்ரோல் பங்க் கோவிலாப்பட்டி விலக்கில் தான் உள்ளது. நான் ஒரு முறை தான் வாதியை சந்தித்துள்ளேன். அதன் பிறகு போனில் தான் பேசியுள்ளேன். வாதியின் வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. வாதி பெட்ரோல் பங்கில் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாதி பெட்ரோல் பங்கிற்கு செல்வதில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாதியின் கணவர் பொன்னமராவதியில் நகை கடை வைத்துள்ளார். பொன்னமராவதியிலிருந்து கோவிலாப்பட்டி 25 கி.மீ தொலைவில் உள்ளது. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தேதிகளில் நான் வாதியை சந்தித்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாதியினுடைய தொலைபேசி எண் 9080301076. மேற்படி நம்பரில் நான் வாதியை தொடர்பு கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாதியை மோசடி செய்யவேண்டுமென்ற எண்ணத்திற்காக வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் வா.சா.ஆ.1ன்படி 25 லட்சம் பெறவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாதி வா.சா.ஆ.1,2 ன்படி கிரையம் பெற 2 மாத கால கெடுவிற்குள் தயாராக இருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. வாதியும் அவரது கணவரும் பலமுறை என்னில் நேரில் பார்த்து பாக்கிக் கிரையத் தொகையை கொடுக்க தயாராக இருந்தார்கள் என்றும் கிரையம் எழுதி பதிவு செய்துகொள்ள தயாராக இருந்தார் என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் பின் யோசனையுடன் தவறான தகவல்களை தெரிவித்து எதிர்வாதம் செய்கிறேன் என்று சொன்னால் அதுசரியல்ல. வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் பொய்யான எதிர்வாதம் செயது வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் மற்றவர்களிடம் பரிவர்த்தனை செய்யும் போது பேங்க் மூலமாக தான் பரிவர்த்தனை செய்வேனா என்றால் பேங்க் மூலமாக செய்வேன் மற்ற படியும் செய்வேன். என்னுடைய வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் அது சரியல்ல.